# கொ/இந்துக் கல்லூரி, கொழும்பு – 4

## முதலாம் தவணைப் பரீட்சை – 2016

## வரலாறு II

## தரம் - 11

சுட்டெண்:........................ நேரம் : 3 மணி

கவனிக்குக.

- பகுதி **I** இல் முதலாம் வினா கட்டாயமானது.
- பகுதி **II** இலிருந்து **நான்கு** வினாக்களுக்கும், பகுதி **III** இல் இருந்து **ஒரு** வினாவுக்கும் விடை தருக.

### பகுதி I

**01.** (அ) - உமக்கு வழங்கப்பட்டுள்ள இலங்கைப் படத்தில் வினா (i) இல் உள்ள எல்லா வரலாற்று இடங்களையும் குறித்துப் பெயரிடுக.

- உலகப் படத்தில் வினா (ii) இல் உள்ள எல்லா வரலாற்று இடங்களையும் குறித்துப் பெயரிடுக.

i. கலாஓயா, பாகியன்கல, ஜம்புகோளப்பட்டினம், பெட்ரிக்கோட்டை, மல்வானை, தேவநகரம், மினிகாகல் கந்த, இரணைமடு, அரிப்பு, மாகம.

(10 புள்ளிகள்)

ii. கொன்ஸ்தாந்திநோபிள், கல்கத்தா, சுமாத்திரா, வங்கக்கடல், சீனா, ஆங்கிலக் கால்வாய், மத்திய தரைக்கடல், பக்தாத்

(8 புள்ளிகள்)

(ஆ) i. A,B,C,D எனத் தரப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடைய நபர்களை ஒழுங்கு முறையில் எழுதுக.

A. "An Historical Relation of the Island Ceylon" எனும் நூலின் ஆசிரியர்.

B. 1ம் இராஜசிங்க மன்னன் கண்டி இராச்சியத்தை ஆக்கிரமிக்க உதவிய கண்டிப் பிரதானி.

C. படுகொலைச் சட்டத்தை இயற்றிய முதல் மன்னன்.

D. 1ம் விஜயபாகு மன்னனால் பரிசுகளும், சலுகைகளும் வழங்கப் பெற்ற தண்ட நாயக்க.

(4 புள்ளிகள்)

➢ தரப்பட்டுள்ள படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை எழுதுக.

ii. A. படத்தில் காணப்படும் உருவத்தினால் குறிக்கப்படுவோர் யாவர்?



B. இவ் ஓவியம் அமையப்பெற்றுள்ள தேவாலயம் எது?

C. இவ் ஓவியத்தினை வரைந்தவர் யார்?

D. நீர் குறிப்பிட்ட கலைஞரின் ஏனைய ஓவியம் ஒன்றின் பெயரினை எழுதுக?

(4 புள்ளிகள்)

iii. A. படத்தில் காணப்படும் கட்டடத்தின் பெயரை எழுதுக?

B. அது எந்த நாட்டில் அமைந்துள்ளது?

C. இக்கட்டடத்தில் தங்கியிருந்தவர் யார்?

D. இக்கட்டடத்திலிருந்தவரால் எழுதப்பட்ட ஆவணம் யாரிடம் வழங்கப்பட்டது?

(4 புள்ளிகள்)



## பகுதி (II)

**02.** i. கீழே தரப்பட்டுள்ள A,B,C என்ற எழுத்துக்களால் குறிப்பிடப்படும் நூல்களின் ஆசிரியர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

A. இண்டிகா B. நெச்சுரலிஸ் ஹிஸ்டோரியா C. பூகோள சாஸ்திரப் பிரவேசம்

(3 புள்ளிகள்)

ii. பின்வரும் வரலாற்று நிகழ்வுகளுக்கான கல்வெட்டுக்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

A. களவு, கொலை போன்றவற்றில் ஈடுபட்டவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனைகள்.

B. போயா தினங்களில் வியாபாரம் செய்வோரிடமிருந்து எண்ணெய் அறவிடல்.

C. குளங்களில் இருந்து நீர் பெறப்படும் வயல்களில் நெல் தவிர, பாசிப்பயறு விதைத்தல் ஆகாது.

D. தீர்ப்பு மண்டபத்திலிருந்து பெறப்பட்ட அபராதப் பணம், பிரதேச விகாரை பிக்குகளின் தேவையின் பொருட்டு வழங்கல்.

(சித்துள் பவ்வ, மிகிந்தலை, பதுளை தூண், கல்பொத்த, வெஸ்ஸகிரி, வேவல்த்கட்டிய)

(4 புள்ளிகள்)

iii. இலங்கையின் புராதன இலக்கிய மூலாதாரம் என்ற வகையில் மகாவம்சம் தொடர்பாக

A. மூலநூல்கள்

B. மகாவம்ச சிறப்புக்கள்

என்பவை பற்றி மூன்று விடயங்கள் கொண்டு விளக்குக.

(5 புள்ளிகள்)

iv. தொல்பொருள் மூலாதாரங்களை பாதுகாப்பதன் முக்கியத்துவங்கள் மூன்றினை விளக்குக.

(6 புள்ளிகள்)

**03.** i. A) ரஜமொஹால்

B) வஜ்ரசும்பட்ட

C) அடிக

எனும் பெயர்களால் குறிக்கப் பெறுபவை யாவை என எழுதுக?

(3 புள்ளிகள்)

ii. A,B,C,D என்ற எழுத்துக்களால் குளம் ஒன்றினது கூறுகளின் மூலம் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அச்செயற்பாடுகளுக்கான குளத்தின் கூறுகளை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

A. நீர் அலைகளின் மூலம் ஏற்படும் அழுத்தத்தால் அணைக்கட்டு அரிப்புறுவதைத் தடுத்தல்.

B. மழைக்காலத்தில் குளத்தில் சேரும் சேற்றினை அகற்றுதல்.

C. பாரிய நீர்ப்பரப்பைத் தாங்கி நிற்றல்.

D. குளங்களுக்கும் வயல்களுக்கும் நீரைக் கொண்டு செல்லல்.

(கலிங்கல் தொட்டி, ஈரக்கலிங்கல், மடைக்கதவு, கால்வாய், குளக்கட்டு, அலைதாங்கி, உயர் அணை)

(4 புள்ளிகள்)

iii. இலங்கையின் புராதன கால மக்களிடம் காணப்பட்ட தொழினுட்ப அறிவினை அடிப்படையாகக் கொண்டு

A. கட்டடங்களில் செங்கோணம் பேணப்பட்டமை.

B. கட்டடங்களுக்கு அத்திபாரமிடல்

என்பவற்றின் சிறப்புக்களை ஒவ்வொரு எடுத்துக்காட்டுகள் மூலம் விபரிக்குக.

(5 புள்ளிகள்)

iv. தெடிகம யானை விளக்கின் அமைப்பு முறைகள் மூன்றினை குறிப்பிட்டு, அவ்விளக்கில் அசையா நீர் விஞ்ஞான முறை பிரயோகிக்கப்பட்ட முறையினை விளக்குக.

(6 புள்ளிகள்)

**04.** i. கீழே A,B,C எனும் எழுத்துக்களால் குறிக்கப்பெறும் வரலாற்று இடங்களின் தற்போதய பெயர்களை எழுதுக.

A. கோகண்ண தித்த

B. கந்துரு கொட

C. நுருபுரம்

(3 புள்ளிகள்)

ii. பின்வரும் வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புடைய மன்னர்களின் பெயர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிந்து எழுதுக.

A. கர்ப்பிணித் தாய்மாரின் தேவைகளுக்காக பிரசவ விடுதிகளை கட்டியமை.

B. பத்தினி தெய்வ கோயில் திறப்புவிழா ஒன்றுக்கு சேர இராச்சியம் சென்றமை.

C. பிராமணர்களின் வழிபாட்டிடமான சொத்திசாலாவை நிறுவல்.

D. இருபது சீன இராஜதந்திரிகள் இலங்கை வந்தமை

(பண்டுகாபயன், 6ம் அக்ரபோதி, உபதிஸ்ஸ, 1ம் கஜபாகு, கனிட்ட திஸ்ஸ, 4ம் காசியப்பன்)

(4 புள்ளிகள்)

iii. வசப மன்னன் சிறந்த ஆட்சியாளன் எனக்கொள்வதற்கு அவனால் மேற்கொள்ளப்பட்ட

A. சமயப் பணிகள் B. நீர்ப்பாசனப் பணிகள் இவ்விரண்டு வீதம் விபரிக்குக.

(5 புள்ளிகள்)

iv. மன்னர்களின் செயற்பாடுகளும் அவர்கள் தோற்றம் தர விரும்பிய விதத்தினையும் அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளை மூன்று எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்குக.

(6 புள்ளிகள்)

**05.** i. இரண்டாவது நகரமயமாக்க காலகட்டத்தில் பின்வரும் இடங்களை தலைநகராக்கிய மன்னர்களின் பெயர்களை எழுதுக.

( A- கம்பளை B – தம்பதெனியா C- கோட்டை) (3 புள்ளிகள்)

ii. A. யாப்பகூவ மலைக்குன்றின் உச்சியில் கோட்டை கட்டி அப்பகுதியை பாதுகாத்தல.

B. சீன தளபதி செங்ஹோ, கைதியாக சீனாவுக்கு கொண்டு செல்லல்

C. பஸ்துன் கோறளைப் பகுதியில் சிங்களக் கிளர்ச்சியை அடக்கல்.

D. மரச்செதுக்கல் வேலைப்பாடுகளுக்கு புகழ்பெற்ற அம்பக்க முருகன் கோயிலை அமைத்தல்.

மேலே குறிப்பிட்ட விடயங்களுடன் தொடர்புடைய மன்னர்களின் பெயர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

(4 புள்ளிகள்)

(புவனேகுபாகு ஆதிபாதன், வீர அழகேஸ்வரன், 3ம் விக்கிரமபாகு, சுப தளபதி, அம்புலுகல குமாரன், போசத் விஜயபாகு, ஜயபாகு )

iii. இரண்டாம் பராக்கிரமபாகுவின் செயற்பாடுகளை

அ) இலக்கிய பணி ஆ) அரசியல் பணி என்பனவற்றின் அடிப்படையில் இவ்விரண்டு உதாரணங்கள் மூலம் விளக்குக. (5 புள்ளிகள்)

iv. பொலநறுவை இராசதானியின் வீழச்சிக்கான காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.

( 6 புள்ளிகள்)

**06.** i. A. கோட்டை ஆட்சியாளனான 6ம் விஜயபாகுவைக் கொன்றவன்.

B. சீதாவாக்கை இராச்சியத்திற்கு எதிரான முல்லேரியா போரினை வெற்றி கொண்ட இளவரசன்.

C. போர்த்துக்கேயர் இலங்கை வரும்போது, யாழ்ப்பாண ஆட்சியாளனாகஇருந்தவன்.

மேற்கூறப்பட்ட விடயங்களுடன் தொடர்புடைய நபர்களின் பெயர்களை எழுதுக.

(3 புள்ளிகள்)

ii. A. டொன் பிலிப் எனும் பெயரில் கிறிஸ்தவ சமயத்தை தழுவிக் கொள்ளல்.

B. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனின் ஆட்சி ஆரம்பத்தில் ஆட்சியில் தலையிட்டு வந்தவர்.

C. கண்டி இராச்சியத்தின் பிரதம பிரதானி பதவி

D. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் ஆட்சியமைக்க உதவி செய்தவர்.

மேலே குறிப்பிட்ட நிகழ்வுகளுக்குரிய நபர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

(எகலபொல, பிலிமத்தலாவ, யமசிங்க பண்டார, நரேனப்பா, கோணப்பு பண்டார, பல்லேகம்பா, கரலியத்த பண்டார ) (4 புள்ளிள்)

iii. கோட்டை இராச்சியத்தின் வீழச்சிக்கு தொன் ஜீவான் தர்மபாலனின் செயற்பாடுகள் காரணமாக அமைந்தமையை இரு உதாரணங்களுடன் விளக்குக. (5 புள்ளிகள்)

iv. அ) அரசியல்

ஆ) பொருளாதாரம்

இ) சமயம்

ஆகியவற்றுக்கு முதலாம் விமலதர்மசூரியன் ஆற்றிய பணிகளை இவ்விரண்டு உதாரணங்கள் மூலம் விளக்குக. (6 புள்ளிகள்)

**07.** i. A. இந்தியாவின் மொகலாயப் பேரரசரான ஜஹங்கீருடன் வர்த்தக நடவடிக்கைகள் பற்றி பேச்சுவார்த்தை நடத்திய ஆங்கிலேயர்.

B. கண்டி மன்னனை 1795 இல் சந்தித்து, ஒல்லாந்தருடனான போருக்கு உதவி செய்ய கோரிக்கை விடுத்தவர்.

C. புகழ் பெற்ற பெண் கவிஞரான கஜமன் நேனாவுடன், போட்டிக்கு கவிபாடும் தேர்ச்சி பெற்றிருந்தவர்.

மேற்கூறப்பட்ட விடயங்களுடன் தொடர்புடைய நபர்களின் பெயர்களை எழுதுக.

(3 புள்ளிகள்)

ii. (அ) திருகோணமலைத் துறைமுகம் (ஆ) கண்டி இராச்சியம் ஆகியவற்றை பிரித்தானியர் கைப்பற்ற விரும்பியமைக்கான காரணிகள் இவ்விரண்டு வீதம் எழுதுக. (4 புள்ளிகள்)

iii. அ) கோல்புறூக் சீர்திருத்தத்தின் தாக்கம்

ஆ) அரசின் புதிய வரிக்கொள்கை

1848 சுதந்திரப் போராட்டத்திற்கு எவ்வாறு காரணமாகின என்பதை இவ்விரண்டு உதாரணங்கள் மூலம் விளக்குக.

(5 புள்ளிகள்)

iv. அ) 1848 போராட்டம் தோல்வியடைந்தமைக்கான இரு காரணிகளை விளக்குக.

ஆ) இப்போராட்டத்தின் விளைவுகள் இரண்டை விளக்குக. (6 புள்ளிகள்)

## பகுதி III

**08.** i. A) அச்சியந்திரம் B) தொலைநோக்கி C) புவியீர்ப்பு சக்தி

போன்றவற்றின் கண்டுபிடிப்பாளர்களை எழுதுக.

(3 புள்ளிகள்)

ii. A. மறுமலர்ச்சிக்கால அறிவு வளர்ச்சியின் விளைவாக, திருச்சபையின் குறைபாடுகளை விமர்சித்தல்

B. புளோரன்ஸ் நகர கலைகளுக்கு அனுசரனை வழங்கல்

C. ''டிவினா கொமிடியா'' என்ற காவியத்தை ஆக்கியமை

D. கோள்கள் அனைத்தும் சூரியனை நீள்வட்டப் பாதையில் சுற்றி வருதல்.

மேலே குறிப்பிட்ட விடயங்களுடன் தொடர்புடைய நபர்களை அடைப்புக்குள் இருந்து தெரிந்து எழுதுக.

(நிக்கலஸ் கொப்பணிகஸ், மெடிசி, பெட்ராக் கெப்லர், தாந்தே, மார்டின் லூதர், லியனடோ டாவின்ஸி)

(4 புள்ளிகள்)

iii. ஐரோப்பாவில் மறுமலர்ச்சி தோன்றியமைக்கான காரணிகளில்

A) கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியர் வசமாதல்.

B) அறிவு வளர்ச்சி

எவ்வாறு காரணமாகின என்பதனை இவ்விரண்டு எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்குக.

(5 புள்ளிகள்)

iv. மறுமலர்ச்சியானது இலங்கையில் தாக்கம் செலுத்திய விதத்தினை பின்வரும் துறைகளுடன் தொடர்புபடுத்தி இவ்விரண்டு உதாரணங்களுடன் விளக்குக.

A. பொருளாதார மாற்றங்கள்

B. அரசியல் மாற்றங்கள் (6 புள்ளிகள்)

**09.** i. A. பாதுகாப்பு விளக்கு

B. புகையிரத என்ஜின்

C. புகைக்கப்பல்

ஆகியவற்றைக் கண்டறிந்தவர்களின் பெயர்களை எழுதுக. (3 புள்ளிகள்)

ii. A. குதிரை வண்டி மூலமான தபால் சேவையை முதன்முதலில் ஆசியாவில் ஆரம்பித்தல்.

B. பெனி தபால் சேவையை 1840 இல் ஆரம்பித்தல்.

C. கைத்தொழில் புரட்சியில் அதிக வளர்ச்சி கண்ட ஒரே ஆசிய நாடு

D. டெம்லர் 1885 இல் மோட்டார் வண்டியைக் கண்டுபிடித்தல்

மேற்கூறப்பட்ட விடயங்களுடன் தொடர்புடைய நாடுகளை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

(இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான், இலங்கை, ஜேர்மனி, போலந்து) (4 புள்ளிகள்)

iii. A) பொருளாதார காரணிகள்

B) அரசியல் காரணிகள்

போன்றன இங்கிலாந்தில் கைத்தொழில் புரட்சி ஏற்பட எவ்வாறு காரணமாயின என்பதை இவ்விரண்டு உதாரணங்களுடன் விளக்குக. (5 புள்ளிகள்)

iv. A. கைத்தொழில் புரட்சியானது, விவசாயத்துறையில் ஏற்படுத்திய வளர்ச்சி பற்றி இரு காரணிகளுடன் விளக்குக.

B. இலங்கையின் போக்குவரத்து துறையில் கைத்தொழில் புரட்சி ஏற்படுத்திய தாக்கத்தை இரு உதாரணங்களுடன் விளக்குக. (6 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education